**செய்தி வெளியீடு எண் : 1096** **நாள் : 31.07.2024**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட கேரளா மாநிலத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ரூ.5 கோடிக்கான காசோலையை மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களை நேரில் சந்தித்து மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் வழங்கினார்.</u>**

கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களை நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு தம்முடைய ஆழ்ந்த வருந்தங்களையும் இரங்கலையும் தெரிவித்ததுடன், தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக உறுதியளித்திருந்தார். அதன்படி, தமிழ்நாட்டிலிருந்து இரண்டு இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளின் தலைமையில் மீட்புக்குழு மற்றும் மருத்துவக் குழுவினரை கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு அவர்கள் தேவையான மீட்பு மற்றும் மருத்துவப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

நிவாரணப் பணிகளுக்கென கேரள அரசுக்கு தமிழ்நாடு அரசின் சார்பாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து கோடி ரூபாய் வழங்குவதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.7.2024 அன்று அறிவித்திருந்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு.பினராயி விஜயன் அவர்களை திருவனந்தபுரத்தில் இன்று (31.7.2024) நேரில் சந்தித்து ரூ.5 கோடிக்கான காசோலையை அவரிடம் அளித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu